S. M. FERNANDO
Opticians
Sight Tested Prescriptions
Accurately Dispensed
★ ★ ★
580, HOSPITAL ROAD,
Near Bank of Ceylon
JAFFNA;

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5.00

கண் வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளைச்
சரியாக கொடுப்போம்
★ ★ ★
எஸ். எம். பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
இலங்கை வங்கி அருகாமை
யாழ்ப்பாணம்.

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 14 சனிக்கிழமை [30-11-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 4

இந்திய மாநிலங்களை விட

கூடுதலான அதிகாரப் பகிர்வு தேவை என்கிறார் தொண்டா

சுவிஸ், கனடா நாடுகளில் உள்ள முறைகளை ஆராய நேரிடுமாம்

கொழும்பு, நவம்பர் 30

அமைதியைத் தேடும் பணியின்போது, வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு, இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களைவிட, கூடுதல் அதிகாரங்களை வழங்கவேண்டி நேரிடலாம்;

அப்போது சுவிட்சர்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் உள்ள சமஷ்டி முறைகளைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

-இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முன்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர் தொண்டமானை, அவர் இந்தியா செல்வதற்கு முன்னர் கொழும்பு "ஐலண்ட்" பத்திரிகைப் பிரதிநிதி பேட்டி கண்டிருக்கிறார். அப்போதே முன்கண்ட கருத்தைத் திரு தொண்டமான் வலியுறுத்தினார்.

(3 ஆம் பக்கம் பார்க்க)

கண்மூடித்தனமாக இனி குண்டு வீச்சு நடக்காதாம்!

தளபதி ஹமில்டன் சொல்கிறார்

கொழும்பு, நவ. 30

வடக்கு — கிழக்குப் பகுதிகளில் இனிமேல் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படமாட்டா. எனது நேரடியான அங்கீகாரத்துடன் மட்டுமே குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெறும்.

கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க கொழும்பு அரச சார்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குண்டு வீச்சுக்கள் புலிகளின் இலக்குகள், தளங்கள் மீது மட்டுமே நடத்தப்படும் என்றும்—

புலிகளுக்கு எதிரான எமது நடவடிக்கைக்கு தமிழ் மக்கள் உதவ வேண்டும் என்றும் அவர் தமது பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-த)

அரியாலையில் நேற்றும் பொம்மர் குண்டு வீச்சு!

ஷெல் வீச்சில் பெண் படுகாயம்

யாழ்ப்பாணம், நவ. 30

அரியாலை கிழக்குப் பகுதியில் நேற்று மாலையும் இரண்டாவது நாளாக பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின. அதே சமயம் இதே பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

பொம்மர்கள் குண்டு வீச்சு நடத்திக் கொண்டிருந்த சமயம், இப்பகுதிக்கு மேலாக ஒரு ஹெலியும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

பூநகரி அல்லது மண்டைதீவுப் பகுதியில் இருந்து ஏவப்பட்டதாகக் கூறப்படும் ஷெல் வீச்சுக்கு இலக்காகி நகேஸ்வரி பாலசிங்கம் (24 வயது) என்ற இளம் பெண்

(3ஆம் பக்கம் பார்க்க)

கைதிகள் விவகாரம்:

ஈழம் யுத்தத்தில் முக்கிய திருப்பமாம்!

கொழும்பு, நவ. 30

தமது காவலில் உள்ள 40 இற்கும் அதிகமான படையினரை அவர்களது உறவினர்கள் சந்திக்க விடுதலைப் புலிகள் அனுமதித்திருப்பது ஈழ யுத்தத்தில் ஒரு முக்கிய திருப்பமாகும் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இறுதியாக, சமாதானப் பேச்சுவார்த்தையில் இறங்குவதற்கான தனது இசைவை விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் இதன் மூலம் "ஜாடை" காட்டியிருக்கிறார் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

"பிடிபட்டுள்ள கைதிகள் விடயத்தில் விடுதலைப் புலிகள் திடீரென சிரத்தை காட்டுவது ஏன் என்பது எங்களுக்குப் புரியவில்லை"— என்று மற்றோர் இராணுவ அதிகாரி கூறினார்.

இத்தகவல்கள் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் வெளியாகியுள்ளன.

அகப்பட்டிருக்கும் படையினரைச் சந்திக்கச் செல்லும் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இரண்டு, மூன்று நாட்கள் தங்கியிருப்பார்கள் என்றும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

5,000 மீனவகுடும்பங்களுக்கு நிவாரண உணவு கிடைக்கும்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் தொழில் இழந்துள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களில் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு ஒரு மாதத்துக்கு இலவச உலர் உணவு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து நேற்று யாழ். திரும்பிய அரச அதிபர் இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு மட்டும் இலவச உலர் உணவு வழங்கப்படும் என முன்னர் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே.

ஆனால், இப்போது யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு வெளியேயும் தெரிவு செய்யப்படும் கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த இலவச உலர் உணவு நிவாரணத்தை வழங்க அனுமதி கிடைத்துள்ளது. (ஒ-ர)

சவர்க்கார தடை நீங்கும்?

வடபகுதிக்கு சவர்க்காரவகைகளைத் தாராளமாக எடுத்துச்செல்ல விரைவில் அனுமதிக்கப்படும் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கே சவர்க்காரம் எடுத்துச்செல்ல விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை நீக்குவது குறித்து அண்மையில் புனர்வாழ்வு அமைச்சின் உயரதிகாரிகள் மட்டத்தில் ஆராயப்பட்டதாகவும்—

தடை நீக்கம் பற்றி விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவிருப்பதாகவும் நம்பகமாக தெரியவருகிறது. (ஒ-ர)

ராஜீவ் கொலைச் சம்பவம்

கருணாநிதி கைதாவார்?

கொழும்பு, நவ. 30

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியும் கைது செய்யப்படலாம்.

சென்னையிலிருந்து வெளியாகும் அரசியல் ஏடு ஒன்றின் ஆசிரியர் ஒருவர் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் எழுதிய செய்திக் கட்டுரையில் இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் வெளியிட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் தமிழக அரசின் முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவர் கருணாநிதியின் தூரத்து உறவினர். 1969 முதல் 1976 வரை கலைஞரின் பிரத்தியேகச் செயலாளராகப் பதவி வகித்தவர்.

1976 இல் கருணாநிதியின் தி.மு.க. அரசு கலைக்கப்பட்டு கலைஞருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டபோது—

நாகராஜன் மீதும் பல்வேறு ஊழல் குற்றங்கள் சுமத்தப்பட்டன.

ஆனால் மத்தியில் ஆட்சியில் இருந்த இந்திரா காந்திக்கும் கலைஞருக்கும் இடையில் மீண்டும் நல்லுறவு ஏற்பட்டதை அடுத்து இந்தக் குற்றச்சாட்டுகள் வாபஸ் பெறப்பட்டன.

1989 இல் கலைஞர் மீண்டும் ஆட்சிக்கு வந்ததை அடுத்து நாகராஜன் உள்துறை செயலாளராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

துரை மரணம்

இதேசமயம்—

ஓய்வுபெற்ற தமிழகப் பொலிஸ் இயக்குநர் நாயகம் பி. துரையும் ராஜீவ் காந்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்ப......இவ்வளவு நாளும் கண் மூடித்தனமாய்த் தான் குண்டு வீசியிருக்கினம் எண்டதை ஒப்புக் கொள்றார் போலை.........!

மின்சார விநியோகத்துக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்!

யாழ்ப்பாணம், நவ. 30

வடமாகாணத்துக்கு மின்சார விநியோகிக்க விதிக்கப்பட்டிருந்த தடையை கூட்டுப்படைத் தலைமையகம் நீக்கியுள்ளது.

இது குறித்து இலங்கை மின்சார சபையின் தலைவருக்கு கூட்டுப்படைத் தலைமையகம் கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக கொழும்புத் [illegible] தெரிவித்தன.

வடமாகாணத்துக்கான மின் விநியோகத் தொடர்பைத் திருத்துவதற்குத் தேவையான மின்கம்பங்களை மின்சாரசபை இறக்குமதி செய்து கொழும்பில் வைத்திருப்பதாகவும் —

கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்காததால் [illegible] வேலைகளை ஆரம்பிக்க முடியாதிருப்பதாகவும் முன்னர் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கொழும்பில் நடந்த வடக்கு, கிழக்கு நிலைமை குறித்த [illegible] மாநாட்டில் இந்த விடயம் பற்றி விரிவாக ஆராயப்பட்டது என்றும்—

மின்சாரம் வழங்க உள்ள

(3 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் 12 படையினர் பலி!

கொழும்பு, நவ. 30

மட்டக்களப்பு மாவட்டம், இலுப்பையடிக் கிராமத்தில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 12 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மற்றும் 11 படையினர் காயமடைந்தனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

ரோந்து சென்ற படையினர் மீது மறைந்திருந்த புலிகள் போராளிகளே தாக்குதல் நடத்தினர் என்றும் இந்திய வானொலி அறிவித்தது. (ஒ-த)

கிழக்கில் மீண்டும் ராணுவ நடவடிக்கை

கொழும்பு, நவ. 30

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் மீண்டும் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் தெற்கன்சேனையில் விடுதலைப் புலிகளின் பிரதான தளமான ரமேஷ் முகாமை படையினர் வெற்றிகரமாகத் தாக்கினர் என்றும்—

இந்த நடவடிக்கைக்கு "வட்டரவும" (சுற்றிவளைப்பு) என்று பெயரிடப்பட்டுள்ளது என்றும் கூட்டுப் படைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

வவுனியாவில் கடந்த புதன் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினர் பத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட சம்பவத்துக்குப் பதிலடியாக, கிழக்கில் புதிய தாக்குதல்களை படையினர் ஆரம்பித்துள்ளனர் என்று ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது. [ஒ-த-3]

அதிருப்திக் குழுவினரின் கட்சிக் கொடியில் கழுகு!

கொழும்பு, நவ 30

லலித்—காமினி குழுவினர் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் "ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி" கட்சியின் கொடி பச்சை நிறத்தில் கழுகுச் சின்னத்தைக் கொண்டதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டதை ஆட்சேபித்து லலித்—காமினி குழுவைச் சேர்ந்த எட்டு அதிருப்தியாளர்களும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் மீது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தீர்ப்பு வழங்கப்பட இருக்கிறது.

இந்த வழக்கில் தோல்வியுற்று ஐ.தே.க. உறுப்பினர் அந்தஸ்தையும், எம்.பி. பதவியையும் அவர்கள் இழந்தால்—

புதிய கட்சி ஆரம்பிப்பது பற்றிய அறிவிப்பை அவர்கள் உடன் வெளியிடுவர்

(3 ஆம் பக்கம் பார்க்க)

தபால் சேவை பெருமளவு பாதிப்பு:

ஊழியரை வேலைக்குவர அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 30

ஊரடங்கு தொடர்வதன் காரணமாக அத்தியாவசிய சேவைகளில் ஒன்றான தபால்சேவை பாதிக்கப்பட்டிருப்பதால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல தபாலகங்களிலும் உள்ள தபால் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் உடனடியாக கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று வடபகுதிப் பிரதம அஞ்சல் அத்தியட்சகர் திரு. ச. சடாட்சரநாதன் கேட்டுள்ளார்.

கப்பல் மூலம் பெறப்பட்டுள்ள தபால்களை துரிதமாக விநியோகிக்கவும்—

நத்தார் — புதுவருட காலத் தபால்களைப் பரிமாற்றம் செய்யவும்—

பொதுப் பரீட்சைகள் இடையூறு இன்றி நடைபெறவும் — தபால் சேவை தடையின்றி நடைபெறுதல் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

[illegible] மாத [illegible] சுவை மதி ஆட்டுக் குட்டி ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு. மனோகி C/o, மாட்டின் மாஸ்டர், [illegible] றோட், பண்டத்தரிப்பு (4413)

நல்ல இன அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு, பூச்சி கடித்தப்பட்டவை. வயது 60 நாட்கள். நாதன் [illegible] சண்டி, அரசடி, நவாலி. (18873)

Typewriters-ஆங்கில Portables, Standards தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. [விற்பனைக்குப் பின் உத்தரவாதம் உண்டு] பியூட்டர், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (Shabra அருகாமையில்) (இ-1017)

என்னெய்ப் [illegible] இறந்த [illegible] தயாரிக்கப்பட்டது, "நிலிவ்" ஸ்நானத் தூள், கண்ணுக்கு குளிர்ச்சி, கூந்தலுக்கு வளர்ச்சி 40 இறால் பக்கெற் விலை ரூபா 3/- மட்டுமே, எங்கும் கிடைக்கும். [illegible]

[C/0954]

திருத்த வேலை

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும். தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூட்டர், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/0798)

1992 புலமைப் பரிசில் வகுப்புகள்

5 ஆம், 4 ஆம் ஆண்டுகளுக்கு. ஆரம்பம்: 1-12-91 பி. ப. 3-00 மணி: இடம்: 164, கோவில் வீதி, யாழ்ப்பாணம். ஆசிரியர்: பொன் சுப்பிரமணியம். ஆங்கிலம்: ச. பரமேந்திரா [18869]

துரித பரீட்சை வழிகாட்டி

O/L பரீட்சைக்கான தமிழ் தர மீட்டல் பயிற்சியும், பரீட்சை வழிகாட்டல் குறிப்புகளும் பிரபலமான புத்தகக் கடைகள் எங்கும் கிடைக்கும். விலை ரூபா 10/-, ஆசிரியர் கோப்பாய் சிவம். [4410]

ஆரம்ப ஆசிரியர் விண்ணப்பப்படிவம்

ஆரம்ப ஆசிரியர் விண்ணப்பப்படிவம் 3 - 12 - 1991 முதல் விற்பனைக்கு வரும். [illegible] தாளில் விளம்பர நிபந்தனைகளுக்கேற்ப அச்சிடப்பட்டது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு. நிபந்தனைகளையும் ஏனைய விபரங்களையும் பார்வையிடலாம். இ. [illegible], 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [இ-1018]

சோதிடம்

உங்கள் பிரச்சினைகள் எதுவானாலும் தீர்ந்து அதிர்ஷ்டத்துடன் வாழ சாதகத்துடன் வாருங்கள்! [illegible] பெருமானின் அருட்சக்தி பொய்யா மொழியாக வழங்குகிறது. டிசம்பர் 8 தொடக்கம் 24 வரை மூடப்பட்டிருக்கும். ஸ்ரீ சக்தி கணேச உபாசகர், ஸ்ரீ [illegible] சோதிட நிலையம், 140, பருத்தித்துறை வீதி, [ஸ்ரீ வீரமாகாளி கோவிலடி] நல்லூர். (18878)

யா / செங்குந்த இந்துக் கல்லூரி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

புதிய மாணவர் அனுமதி - 1992

ஆண்டு 6 :
01 - 02 - 1981 க்கும் 31 - 01 - 1982 க்கும் இடையில் பிறந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்;

அனுமதிப் பரீட்சை ஆண்டு 6 :
22 - 12 - 1991 ஞாயிறு நேரம் காலை 9-00 — 12 - 00 மணிவரை நடைபெறும்

பாடங்கள்: கணிதம், தமிழ் மொழி, ஆங்கிலம்.

விண்ணப்பப்படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 10/- செலுத்தி பெற்று 16 - 12 - 91 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

— அதிபர்.

(18877)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் : 13 — 12 — 1939

ஆண்டவன் அடியில் : 22 — 11 — 1989

அமரர்

பொன்னையா தனபாலசிங்கம்

(வலி. கிழக்கு வடபகுதி பல. நோ. கூ. சங்கம்- அச்சுவேலி கிளை முகாமையாளர்)

திதி: 30 - 11 - 1991

பண்பின் பிறப்பிடமான அன்புத்தெய்வமே! காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து ஆண்டிரண்டு போனாலும் உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலா. உங்கள் ஆத்மா சாந்திபெற எந்நேரமும் பிரார்த்திக்கும்;

தாய், மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்.

கல்பேட் வீதி,
அச்சுவேலி தெற்கு.
அச்சுவேலி.

[18602]

---

41 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 11 — 1 — 1926

மறைவு: 21 — 10 — 1991

அமரர் கந்தையா சிவபாதசுந்தரம்

(அரசாங்க பஸ் கூட்டுத்தாபனம் - சாலை முகாமையாளர்)

திதி: 30-11-1991

எங்கள் இதய தீபமே! நீங்கள் மறைந்து நாற்பத்தொரு நாட்கள் ஓடிவிட்டதா! இன்னமும் ஆறவில்லை எங்கள் மனம், ஓயவில்லை எங்கள் கண்ணீர். எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் வழி நடத்திய அன்புத் தெய்வமே! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உறவினர்கள்.

"[illegible]",
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(இ/0951

2ஆம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில்: 1961 — 04 — 24

அரனடியில்: 1989 — 11 — 30

செல்வன் மு. திருஞானசேகரம்

(பிரபல தமிழ் ஆசிரியரும், "புத்தெழில்" மாத சஞ்சிகையின் ஆசிரியரும், புத்தெழில் புத்தகசாலை உரிமையாளரும்)

திதி: 1991 - 12 - 09

விண்ணவரில் தமிழுக்கு இடமே? ஓலைநறுக் குறுமுனி
அமைக்கிறான் என்று அதைக் காணச் சென்றாயோ!
மண்ணில் மனிதத்தின் மகத்தான உயர்வு - தமிழ்
கண்டு நலம் பாட இன்று தேடுகிறோர்
தமிழன்னை புகழ்பாட 'புத்தெழில்' படைத்து
தமிழ் மாணவர் மனதில் [illegible] தமிழ்ச் சுவை-
கொடுத்தாய்
அன்பைக் குழைத்து உறவுகளை வளர்த்து
அனைவர் உள்ளங்களிலும் நிலையானாய்
தமிழே உயிரென வாழ்ந்து
தமிழ் மண்ணுக்காய் உயிர் கொடுத்தாய்
இறைவன் திருப்பாதம் என்றும் ஆறுதல் தரும்.

உமது பிரிவைத் தாங்காத;
குடும்பத்தினர்.

[illegible] வீதி,
புத்தூர்.

[18891]

ஓராண்டு நினைவஞ்சலி

செல்லத்துரை அருட்செல்வன்

மலர்வு: 02 - 05 - 1977

உதிர்வு: 11 - 12 - 1990

திதி: 30 — 11 — 1991

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை உன் நினைவு
அருட்செல்வா உன் வதனம்
நிழலாகப் படர்கிறது
மாளா உன் நினைவுடனே
மனமுருகி நிற்கின்றோம்.

உன் நினைவால் வாடும்;
குடும்பத்தினர்.

செல்லம் ஸ்ரோர்ஸ்,
[illegible]

[18888]

பிறந்த நாள் வாழ்த்து

திரு. இ. இலங்கநாதன்

நாதன் சலவைத் தொழிலகம் (முன்பு ஸ்ரீலங்கா ட்ரைக் கிளீனேர்ஸ்) ஸ்தாபனத்தின் உரிமையாளர் திரு. இ. இலங்கநாதன் இன்று தமது 41 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடுகிறார்;

இவரை மேலும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்;

உற்றார், உறவினர்கள்.

சுன்னாகம்;

பட்டு உடைகள் [illegible] செய்வதில் 33 வருட அனுபவம் பெற்றவர்கள்-

நாதன் சலவை தொழிலகம்
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்;

(18798)

A/L பௌதிகவியல் - புலங்கள்

க. ரவீந்திரநாதன் B.Sc Dip - in - Ed.

பிரிவு I சனி ஞாயிறு } 12-00
பிரிவு II திங்கள் புதன் } 6-15

ஆரம்பம்: 30-11-1991 (இன்று)

BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

[4414]

---

31 ஆம் நாள் நினைவஞ்சலி

கண் வைத்திய நிபுணர்

Dr. சி. வேலாயுதன்

(கண் வைத்தியசாலை கொழும்பு. போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்)

மலர்வு: 04 - 10 1925

உதிர்வு: 31 - 10 - 1991

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'

என்ற உடன்பிறவா அன்புச் சகோதரனுக்கு அஞ்சலி பல.

க. லம்போதரன்.

126/4, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

[4409]

A/L தாவரவியல்

திரு. ஸ்ரீகரன் B. sc.

சனி - ஞாயிறு
7 - 00 — உடற்தொழிலியல்
8 - 00 — கருப்பு
9 - 00 — PAPER CLASS
10 - 00 — அலகு I

ஆரம்பம் : 1 - 12 - 1991

BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(4415)

நன்றி நவிலல்

திருமதி. நாகலிங்கம் பூமணி

(இளைப்பாறிய [illegible] வைத்தியசாலை உத்தியோகத்தர்)

எனது அன்புத் தாயாரின் காலமான செய்தி கேட்டு அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், நேரில் வந்து கொண்டு எங்கள் துயரத்தில் பங்குபற்றி ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள், நல்லூர் [illegible] பாடசாலை ஆசிரியர், மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றேன்,

நா. வர்ணகுலேந்திரன்,
யாழ். பல்கலைக் கழக
சித்த மருத்துவத் துறை.

11, [illegible],
நல்லூர்.

[18884]

உதயன்

நிபந்தனைகளில் நிலைப்பாடு எது?

தமிழர் பிரச்சினை சம்பந்தமான பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கு முன்னர், வடமாகாணத்தின் மீதான பொருளாதாரத் தடை, தமிழ்ப் பகுதிகள் மீதான இராணுவ முற்றுகை என்பன நீக்கப்பட வேண்டும்.

இனப் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு விடுதலைப் புலிகள் விதித்த இரண்டு முக்கிய விடயங்கள் இவை. பேச்சுவார்த்தை முயற்சியில் ஈடுபட்டிருக்கும் அமைச்சர் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்திலும் விடுதலைப் புலிகள் இந்த இரண்டு விடயங்களையும் வலியுறுத்தி இருந்தனர்.

பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கு விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனைகளை, பிரஸ்தாப இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய உள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு பரிசீலனை செய்ய இருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பொருளாதாரத் தடை, இராணுவ முற்றுகையை நீக்குமாறு தெரிவுக்குழு அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்யுமா?

தெரிவுக்குழு சிபார்சு செய்தாலுங் கூட, அரசு அதனை அங்கீகரித்து உடனடியாக நடைமுறைப்படுத்துமா? அவ்வாறு சாதகமாக முடிவு செய்யினும் காரியம் கைகூடுவதற்கு எத்தனை காலமாகும்? — இவ்வாறாக நெடுவழி செல்லும் விவகாரம் இது!

எனவே உடனடியாக இது விடயத்தில் சாதக நிலையை எதிர்பார்க்க முடியாது. எனினும் பொருளாதாரத் தடையையும், இராணுவ முற்றுகையையும் நீக்குவது குறித்துப் பரிசீலனை செய்யப்படவிருப்பதை ஒரு நல்ல ஆரம்ப சகுனமாகக் கருதலாம்:

பொருளாதாரத் தடையால் வடபகுதி மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குவது குறித்து அரசாங்கம் இதுவரையில் மனிதாபிமான நோக்குடன் பார்க்கவில்லை. விடுதலைப் புலிகளைப் பழிவாங்க வேண்டும் என்பதற்காக — மக்களை அவர்களிடம் இருந்து அந்நியப்படுத்த வேண்டும் என்பதற்காக — தமிழர்களைப் பட்டினி போட்டு வருகிறது; பெரியவர்களையும், குழந்தைகளையும் போசாக்கின்மை நிறைந்த மக்கள் கூட்டமாக்கிப் பலவீனமுள்ளவர்களாக - நோயாளிகளாக - மாற்ற முனைந்திருக்கிறது.

இராணுவ முற்றுகையால் தமிழர் தாயகத்தில் இயல்பு வாழ்க்கை குன்றி விட்டது. மக்களுக்குத் தொழில் இல்லை. பொருளாதார மற்றும் உற்பத்தி முயற்சிகள் ஸ்தம்பித்து விட்டன. மக்கள் நிம்மதியாக, பாதுகாப்புடன் தங்கள் சொந்த வீடுகளில் படுத்துறங்க முடியவில்லை.

எனவே பொருளாதாரத் தடை, இராணுவ முற்றுகை என்பன நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நிபந்தனையாகப் பார்ப்பது நியாயமல்ல. அவை தமிழ் மக்களின் வாழ்க்கைத் தேவைகளாக நோக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அப்படியொரு நிலைப்பாட்டை மேற்கொண்டால் மட்டுமே, இரு விடயங்களையும் பரிசீலனை செய்வதால் பயன் உண்டாகும். இல்லையேல் இதுவும் ஒரு ஏமாற்று வேலையாகவும், காலங் கடத்தும் காரியமாகவுமே முடியும்!

'ஹெந்தல' கப்பல் தொடர்ந்து மா ஏற்றி வரும்

தற்போது பருத்தித்துறைக்கு வந்துள்ள 'ஹெந்தல' கப்பல் திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையே மாவை ஏற்றி இறக்கப் பயன்படுத்தப்படும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களில் ஒன்றான மாவை தட்டுப்பாடு இல்லாத வகையில் விநியோகிக்கவென இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

கூடுதலான..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஐலண்ட்'' பத்திரிகையின் அதே பிரதிநிதி, திரு. காமினி திசாநாயக்காவையும் பேட்டி கண்டார்.

அப்போது —

இந்திய சமஷ்டி அமைப்பில் மாநிலங்களுக்கு உள்ள அதிகாரங்களை விட, வடக்கு - கிழக்கு மாகாண சபைக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்க வேண்டி நேரிடும் — என்று தொண்டமான் கூறியது குறித்து காமினியிடம் கருத்துக் கேட்டார்.

அதற்கு திரு. காமினி பின்வருமாறு பதிலளித்திருந்தார்:-

எங்கள் அரசாங்க முறை குறித்துப் புதிய சிந்தனை வேண்டும் என்று நான் நீண்ட காலமாகக் கூறி வருகிறேன்.

இந்தியாவில் உள்ள மாநில முறை | இப்போதுள்ள சூழ்நிலையில் இந்தியாவுக்கே சிறந்த ஒன்றாக இல்லாமலிருக்கலாம்; அதேபோல கனேடிய முறைகளும் இலங்கைக்குப் பொருத்தமில்லாமல் போகலாம், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வே எங்கள் நாட்டுக்குத் தேவை:

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கம் தானும் இன்னும் உரிய அளவில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மாகாண சபைக்கு போக்குவரத்து சேவையை நடத்துவதற்கு அரசாங்கம் விதித்த தடை 13ஆவது திருத்தத்துக்கு முரணானது! — என்றார் காமினி. (அ)

மின்சார--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடையை நீக்க பாதுகாப்பு அதிகாரிகள் இருவரும் இணக்கம் தெரிவித்தனர் என்றும் அறிய வந்தது.

இதனைத் தொடர்ந்து வடக்கிற்கு மின்சார விநியோகத்தை மீளச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக, மின்சார சபையின் வடபிராந்திய முகாமையாளர் மின்சாரசபையின் தலைமைப் பீடத்தினால் அவசரமாகக் கொழும்புக்கு அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் அறியவருகிறது. (உ-3-5)

அரியாலை--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த பெண்ணின் கணவன் குருநாதம் பாலசிங்கம் மற்றும் சுலக்சுதன் (9 வயது) ஜெனி (25 வயது) ஆகியோரும் ஷெல் வீச்சால் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

பொம்மர்கள் வெள்ளைத் தோட்டம் பகுதியை நோக்கித் தாக்குதல் நடத்திய போதிலும், குறிப்பிடத்தக்க சேதம் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அரியாலை கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொம்மர் குண்டு வீச்சில் திருப்பதியைச் சேர்ந்த அகதி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. (த-15-181-80)

கிட்டுவை நாடு கடத்த இலங்கை அரசு கோருகிறது

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. கிட்டுவின் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பத்தை நிராகரித்து, அவரை சுவிஸில் இருந்து வெளியேற்றும்படி இலங்கை அரசு சுவிட்சர்லாந்து அரசைக் கேட்டுள்ளது.

இத்தகவலை இந்திய நாளிதழ் ''ஸ்டேட்ஸ்மன்'' முதற் பக்கச் செய்தியாக வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் அமைந்துள்ள தனது ஐ.நா. தூதரகம் ஊடாக இலங்கை அரசு இக் கோரிக்கையை அனுப்பியுள்ளது என்றும்—

இருதரப்பு உதவியின் அடிப்படையில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாக ஜெனிவாவில் உள்ள இலங்கைத் தூதுப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்; என்றும் 'ஸ்டேட்ஸ்மன்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிட்டுவை நாடு கடத்தும் இலங்கையின் கோரிக்கை முறைப்படியாக வரவில்லை என்று சுவிட்சர்லாந்து அதிகாரி திரு. கிஸ்ட்லர் தெரிவித்தார்.

கிட்டுவை நாடுகடத்தும் கோரிக்கையை இலங்கை அரசு வற்புறுத்துமானால் சுவிஸ் அரசு என்ன செய்யும் என்பதைக் கூறுவதில் தலைநகர் பேர்ணிலுள்ள அதிகாரிகள் தயக்கம் காட்டுகின்றனர்.

தற்போதைய நிலையில் சுவிஸில் திரு. கிட்டு எந்தக் குற்றச் செயலையும் செய்யவில்லை என்றும்—

ஆகவே அவருக்கெதிராக சர்வதேச 'வாரண்ட்' பிறப்பிக்க வேண்டிய தேவை இல்லை என்றும் சுவிஸ் அதிகாரிகள் கூறினர்.

இப்படி தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

உரிய ஆவணங்களுடனேயே கிட்டு சுவிஸ் சென்றார்

ஜெனிவா, நவ. 30

விடுதலைப் புலிகள் பிரமுகர் கிட்டு, ஒழுங்கான பயண ஆவணங்களுடன்தான், சுவிட்சர்லாந்து வந்தார் என்று சுவிட்சர்லாந்து சமஷ்டி நீதி மற்றும் பொலிஸ் திணைக்களப் பேச்சாளர் ஜோர்ஜ் கிஸ்ட்லர் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் ''ஸ்டேட்ஸ்மன்'' பத்திரிகையின் ஜெனிவா செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் —

சுவிட்சர்லாந்து அரசிடம் திரு. கிட்டு அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் — என்றும் திரு. கிஸ்ட்லர் சொன்னார்.

திரு. கிட்டுவின் கோரிக்கை மீது முடிவு எடுக்கப்படும் வரை சுவிஸ் நாட்டில் தங்கியிருக்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் கிஸ்ட்லர் தெரிவித்தார்.

ராஜீவ் கொலையுடன் திரு. கிட்டுவுக்குத் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுவது பற்றி தமது திணைக்களத்துக்குத் தெரியும் என்றும் திரு. கிஸ்ட்லர் சொன்னார். (இ-எ)

மன்னார் - வவுனியா பகுதி அடகு நகைகள் மீளளிப்பு

கொழும்பு. நவ. 30

மன்னார், வவுனியா மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைத்தவர்களின் நகைகளை மீளளிக்கும் நடவடிக்கைகள் கொழும்பில் தற்போது ஆரம்பமாகி உள்ளன;

மன்னார்க் கிளையில் 21-9-89க்குப்பின் 31-8-90 வரை பணம் செலுத்தியவர்களும்—

வவுனியாக் கிளையில் 30-9-91 வரை பணம் செலுத்தியவர்களும்—

[illegible] வீதியில் உள்ள 220 ஆம் இலக்க நகை மீளளிப்பு நிலையத்தில் இம்மாதம் 22 ஆம் திகதிக்கும் டிசம்பர் 6 ஆம் திகதிக்கும் இடையில் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (இ)

தொண்டு நிறுவன செயற்பாடுகளில் படையினர் தலையிடுவதை தடை செய்க!

அனைத்துலக நீதிபதிகள் குழு கோரிக்கை

''இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் செயற்பாடுகளில் படையினர் தலையிடுவதைத் தடுக்க வேண்டும்.

அனைத்துலக நீதிபதிகள் குழு இலங்கை அரசிடம் இவ்வாறு கேட்டிருக்கிறது.

ஜெனிவாவை தலைமையகமாகக் கொண்ட இந்தக் குழு உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இப்படிக் கேட்டிருக்கின்றனர்.

நல்நோக்கங்களுடன் செயற்படும் இந்த நிறுவனங்கள் உள்நாட்டுப் பூசல்களில் [illegible] சம்பந்தப்படவில்லை என்றும்—

அந்த நிறுவனங்களின் சேவைபற்றி வரையறை செய்ய வேண்டும் என்றும் அந்தக் குழு கேட்டுள்ளது. (உ-5)

மட்டக்களப்பில் தமிழர் படையினரால் துன்புறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 30

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முகாம்களில் இருந்து அடிக்கடி வெளியேறும் இராணுவத்தினர் தமிழ் மக்களைக் கண்டபடி கைது செய்வதுடன், அவர்களைத் துன்புறுத்தியும் வருகின்றனர்.

புலிபாய்ந்தகல் முகாமில் இருந்து வெளியேறிய படையினர் வெள்ளாமைச்சேனை என்ற இடத்தில் முகாமிட்டுள்ளனர். அப்பகுதியில் தமிழர்கள் பலர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது;

சந்திவெளி: வடமுனை முகாம் இராணுவத்தினரும் வெளியேறி பெரியமியான்குளம் பகுதியில் முகாமிட்டுள்ளனர் என்றும்—

இவர்கள் தமிழர் பலரைக் கைது செய்ததோடு, தமிழர் ஒருவரை சுட்டுக் கொலை செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வாகனேரி முகாம் படையினர் முருக்கனையில் நிலைகொண்டுள்ளனர் என்றும் [illegible] (ஒ)

திருமலையில் இரு படையினர் பலி

திருகோணமலை மாவட்டம், புல்மோட்டை, 13 ஆம் கட்டைப் பகுதியில், விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்;

ரோந்து சென்ற படையினர் மீது புலிப் போராளிகள் நடத்திய கைக்குண்டுத் தாக்குதலிலும், மிதிவெடியிலும் சிக்கியே இவர்கள் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ)

கருணாநிதி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்தார் என்பதற்கு போதிய ஆதாரங்களை விசேட புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்திருந்தனர் என்றும்—

அவர் எந்தநேரமும் 'கைது செய்யப்படலாம்' என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில்— சமீப பத்து நாட்களுக்கு முன்னர்— சென்னையில் காலமானார்.

அவர் இயற்கை மரணம் எய்தினாரா அல்லது தாம் கைது செய்யப்படுவதைத் தவிர்க்க அவர் தற்கொலை செய்து கொண்டாரா என்பது தெரியவில்லை.

கருணாநிதிக்கு நெருக்கமானவர்களில் துரையும் ஒருவர். சென்னை நகர பொலிஸ் ஆணையாளராக இருந்த துரை, கலைஞர் 1989 இல் பதவியேற்றவுடன்— வெறும் விசுவாசி என்ற தகுதியில்— பொலிஸ் இயக்குநர் நாயகமாக பதவி உயர்த்தப்பட்டவர்.

கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டதை அடுத்து இடம் மாற்றப்பட்ட துரை கட்டாயமாக ஓய்வு பெற்றுச் சென்றார்.

கோபாலசாமியின் தம்பியும் கைது

கருணாநிதியின் தளபதிகளில் ஒருவரான கோபாலசாமியின் தம்பியாரும் ராஜீவ் கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார்.

''தாய் இந்திராவுக்கு ஏற்பட்ட கதி மகன் ராஜீவுக்கும் ஏற்படும்'' — என்று ஒரு தேர்தல் மேடையில்— ராஜீவ் கொலைச் சம்பவம் நடப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர்— கோபாலசாமி கூறியதாக கூறப்படுகிறது.

இதே சமயம் —

தமது தேர்தல் பிரசாரத்துக்கு மத்தியிலும் ராஜீவ் கொல்லப்பட்ட இரவு 9 மணிக்கும் பின் வீட்டைவிட்டு வெளியேறாமல் கருணாநிதி அவரது வீட்டிலேயே தங்கியிருந்தது மேலும் சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

ராஜீவ் கொலைச் சதி பற்றி கருணாநிதி முன்னரே அறிந்திருந்தார் என்பதை இது ஊர்ஜிதப்படுத்துகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது;

அடுத்தது வை. கோ.

இவ் வட்டாரங்களின் தகவலின்படி —

கருணாநிதிக்கு நெருக்கமானவர்கள் தற்போது கைது செய்யப்பட்டு வருகிறார்கள். அடுத்து வை. கோபாலசாமி கைதாவார். தொடர்ந்து வலையில் கருணாநிதி விழுவார்;

1977 — 78 இல் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்த இந்திராகாந்தியைக் கொல்ல முயன்றதாக கருணாநிதி மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது;—

மீண்டும் அவரின் மகனைக் கொன்ற சம்பவத்துக்காக கருணாநிதி மீது குற்றம் சுமத்தப்படுமா?

— இப்படி அந்தச் செய்திக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், நவ. 30

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட செஞ்சிலுவைச் சங்க அங்கத்தினர்கள் அனைவரையும் இன்று மாலை 4 மணிக்கு தேவாலய வீதியில் அமைந்திருக்கும் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 30

அரியாலைப் பகுதியில் நேற்றும், நேற்று முன்தினமும் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களைத் தொடர்ந்து அங்கிருந்து மக்கள் வெளியேறி வருகின்றனர்.

நியாய விலையில் சவர்க்காரம்

சாவகச்சேரி, நவ. 30

சாவகச்சேரியில் தனியார் வர்த்தக நிலையம் ஒன்று சவர்க்கார வகைகளை பங்கீட்டு அட்டைகளுக்கு வழங்கி வருகிறது.

கண்டி வீதியில் அமைந்துள்ள பிரஸ்தாப நிலையம் இதுவரை 5 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு பங்கீட்டு முறையில் சவர்க்காரங்களை விநியோகித்துள்ளது:

எனினும், நாளாந்தம் மக்கள் பங்கீட்டு அட்டையுடன் வரிசையில் நின்று தொடர்ந்தும் பெற்று வருகிறார்கள்:

ஒரு ''சன்லைட்'' கட்டி 14 ரூபாவாகவும், ஒரு 'ரெக்சோனா' கட்டி 15 ரூபாவாகவும் விநியோகிக்கப்படுகிறது. (அ-31-117)

பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கத்துவம் சேர விரும்புவோருக்கான பயிற்சி வகுப்புகள் நாளை முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். சங்கத்தின் தற்போதைய அங்கத்தவர்களும் இந்த வகுப்புகளில் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

அதிருப்திக்குழு..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவிக்கப்படுகிறது:

கட்சிக்கான அமைப்பு விதிகள், அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரங்கள் போன்றவை தயார் என்றும்—

[illegible] தேரோவுக்குச் சொந்தமான 'கொழும்பு-7' இலக்கக் கட்டிடத்தில் தலைமைச் செயலகமாக இயங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது:

கட்சியை கடந்த நவம்பர் 19 ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிப்பதாக முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது;

ஆனால் [illegible] இல்லை என்பதால் அதனை ஒத்திவைக்கும்படி சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா கேட்டுக்கொண்டார் என்றும்—

அதனை ஏற்று லலித் குழுவினர் கட்சி ஆரம்பிப்பதை ஒத்திவைத்தனர் என்றும்— தெரிய வருகிறது;

டிசம்பர் முதல் வாரத்தில் கட்சியை ஆரம்பிப்பது என தற்போது முடிவுசெய்யப்பட்டிருக்கிறதாம்.

இதன் திட்டப்படி பெரிய மாற்றங்களுடன் அடுத்த வருடம் மே 6 ஆம் திகதி அளவில் தேர்தல்கள் நடைபெறும் என லலித் குழுவினரிடம் சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா கூறியிருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

சார்க் மாநாடு டிச, 21 இல்?

புதுடில்லி, நவ. 30
சார்க் உச்சிமாநாடு அனேகமாக டிசம்பர் 21 ஆம் திகதி —ஒரு நாள் கூட்டமாக— நடைபெறக் கூடும் என்று கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

(ஒ-த)

தமிழ் தேசிய படையினர் 10 பேரை தேடி வலைவீச்சு!

சென்னை, நவ. 30
தனித் தமிழ்நாடு பெறுவதற்காக போராடுவதாகக் கூறும் தமிழ் தேசிய மீட்புப் படையைச் சேர்ந்த முக்கிய பத்துப் பேரை தேடி இந்திய "கியூ பிராஞ்ச்" பொலிஸார் வலை விரித்துள்ளனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் தேசிய மீட்புப் படையை அழித்தொழிக்க, 'கியூ' பொலிஸார் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் —

அண்மைக் காலங்களில் இந்த அமைப்பைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

அவர்களிடம் இருந்து வெடி மருந்துகள், ஆயுதங்கள், பணம் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஏ)

கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 30
யாழ்ப்பாணம், கோவில் வீதியிலுள்ள தீவக அரசியல் பொறுப்பாளர் அலுவலகத்தில் நாளை தீவகப்பகுதி சிற்றூராட்சிகளுக்கான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தீவகப் பகுதி சகல சிற்றூராட்சித் தலைவர்கள், செயலாளர்கள், உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. தமிழ்அண்ணா கேட்டுள்ளார். (ஒ-167)

ம. எண்ணை வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 30
எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சி. ஈ. (சாதாரண) தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு நியாய விலையில் மண்ணெண்ணெய் வழங்குமாறு பிராந்திய கல்விப் பணிப்பாளர், அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மண்ணெண்ணெய் விலை ஏற்றத்தால், மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ-3)

இடமாற்றம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 30
யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபரின் இடமாற்ற உத்தரவு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டிருப்பதாக பிராந்திய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கல்லூரியின் அபிவிருத்திச் சமூகம் விடுத்த வேண்டுகோளையடுத்து இடமாற்றம் பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதிபராகக் கடமையாற்றி வந்த திருமதி ரி. நாகராஜாவின் இடத்துக்கு திருமதி பி. எஸ் ஸ்ரீதரராஜா நியமிக்கப்பட்டிருந்தார். அந்த நியமனமே பிற்போடப்பட்டிருக்கிறது. (உ-3)

ஷெல், பீரங்கி தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 30
ஊர்காவற்றுறை, காரைநகர் படையினர் நேற்று முன்தினம் மாலை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்: பொன்னாலைச் சந்தி, குடியேற்றப் பகுதி, வரதராஜப் பெருமாள் ஆலயப் பகுதி ஆகிய இடங்களிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இதேசமயம் திருவடி நிலைக் கடற் பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. சேந்தாங்குளம் பகுதியில் விழுந்த குண்டுகளினால் வீடுகள் சில சேதம் அடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-15)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம்
நடத்தும்

மாபெரும் இசை மாலை

நிகழ்ச்சிகள்:- சாந்தன் இசைக்குழுவினரின் புரட்சி கானங்கள்
களத்தில் காத்தான் (நாடகம்)
காலம்:- 7 - 12 - 1991 சனிக்கிழமை
மாலை 6 மணிக்கு
இடம்:- சாவகச்சேரி இந்துக்கல்லூரி
திறந்த வெளியரங்கு
குறிப்பு:- 22 - 6 - 1991 நடைபெறவிருந்த நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகள் செல்லுபடியாகும்.
(சி/0949)

அரசாங்க அறிவித்தல்

இடம்பெயர்ந்த சுகாதாரத் திணைக்கள ஊழியர்கள்

தீவக வைத்திய நிறுவனங்களிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து, வந்து குடாநாட்டிலுள்ள வேறு நிலையங்களில் தற்காலிகமாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட்ட, வைத்திய அதிகாரிகள், பதிவு வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய ஊழியர்கள் யாவரும் திரும்பவும் தீவகங்களிலுள்ள தத்தமது வைத்திய நிறுவனங்களுக்கு உடனடியாகச் சென்று பணிபுரியுமாறு பணிக்கப்படுகின்றார்கள்.

இவர்களை உடனடியாக விடுவித்து இப்பணிமனைக்கு அறிவித்தருமாறு, இவர்கள் தற்போது பணிபுரியும் நிறுவனத் தலைவர்கள் கோரப்படுகின்றார்கள்.

ஒப்பம்: ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(சி 0956)

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

விசேட பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி (01 - 12 - 1991) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு வேண்டுகிறேன்.

பொ. சந்திரநாதன்
செயலாளர்

கொக்குவில் இந்துக் கல்லூரி,
பழைய மாணவர் சங்கம்.
(18893)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
ஆண்டு 6 அனுமதி பெறுவதற்கான

பிரவேசப் பரீட்சை - 1992

1. இப் பரீட்சை 28-12-1991 இல் நடைபெறும்.
2. தற்போது ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களும், 01-02-1981 ஆம் திகதிக்குப் பின்னர் பிறந்தவர்களும் மட்டுமே இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.
3. பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் ரூபா 45/ (நாற்பத்தைந்து) செலுத்தி 02 12-1991 தொடக்கம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் இக் கல்லூரியில் நேரில் 14 12-91 (சனிக்கிழமை) முன்னதாகக் கையளிக்கப்பட வேண்டும். 14-12-91 ஆம் திகதிக்குப் பின்னர் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
5. இக்கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.
6. கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைப் பிரவேசப் பத்திரங்களை கல்லூரியில் 24-12 91 செவ்வாய்க்கிழமை நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

அதிபர்
யாழ் இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(C/0952)

மரண அறிவித்தல்கள்

செல்லப்பா யோசேப்பு இளையதம்பி

பரியோவான் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியரும், யாழ்ப்பாணக் கல்வி நிலைய ஸ்தாபகருமான செல்லப்பா யோசேப்பு இளையதம்பி 28-11-1991 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிரேஸ் அற்புதம்மாவின் அன்புக் கணவரும், பத்மினிதேவி (ஆசிரியை, நைஜீரியா), டாக்டர் சத்தியசீலன் (நைஜீரியா), டாக்டர் ஜெயசீலன் (Medical Centre கண்டி), அற்புதவனிதா, இந்திராமிர்தம் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், எட்வின் (ஆசிரியர் நைஜீரியா முன்னாள் ஆசிரியர் பரியோவான் கல்லூரி), ஆனந்தராணி (ஆசிரியை நைஜீரியா, முன்னாள் ஆசிரியை கண்டிக்குளி மகளிர் கல்லூரி), சந்திரா (Medical Centre, கண்டி) டாக்டர் சிவரத்தினம் (வவுனியா), எனஸ்ற் (பொறியியலாளர், கொழும்பு) ஆகியோரின் மாமனாரும், பிரபாகரன், சந்திரசேகரன், ஞானசேகரன், சத்தி ஜிற், கபில ஜிற், அஜந்தா, அஞ்சனா, அனோஜா, பிரியதர்ஷனா, ஜீவமணி, தாமரி, இருஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 30-11-1991 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் இவ் அறிவித்தலை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்
பிள்ளைகள்

"அற்புத மனை",
நவாலி தெற்கு, மானிப்பாய்
(18607)

நாகமுத்து சின்னத்தம்பி

நாகமுத்து சின்னத்தம்பி 29-11-91 இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் கணவரும், சிவசுப்பிரமணியத்தின் மாமனாரும், நாகலட்சுமியின் தகப்பனும் கிருஸ்ணதாஸ் பிரேமதாஸ் விஜிதா குகதாஸ் ஆகியோரின் பேரனும், குமரனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-11-91 சனிக்கிழமை 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
நா. குமார்

50/16 செட்டித்தெரு,
நல்லூர்.
(18608)

உயர்கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி

பட்டப் படிப்புகள்
பேராதனை/
யாழ். பல்கலைக்கழகம்
மாணவர்களின்
நலன் கருதி

1st in Com.
G. A. Q

விரிவுரைகள்
வியாழன், வெள்ளி
நாட்களில்
ஆரம்பம்:
05 - 12 - 1991
3 மணிக்கு
(சி-1020)

உயர்கலைக் கல்லூரி
ஆனைப்பந்தி
கலை, வர்த்தக-

A/L 92

மாலை நேர வகுப்புகள்
ஆரம்பம்:
05 — 12 — 1991
மாலை 3 மணி

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு
பொருளியல் — திரு. கலாகரன்
கணக்கியல் — திரு S. K. பிரபாகரன்
வர்த்தகம் — திரு. ரகுநாதன்
அளவையியல் — திரு. யுகபாலசிங்கம்
தமிழ் — திரு. குழந்தைவேல்
இந்துநாகரிகம் — திரு. சோதி
புவியியல் வரலாறு — திரு. வேலாயுதபிள்ளை
இந்து சமயம் — திரு. சர்வேஸ்வரசர்மா
(சி-1028)

G. C. E. O/L முன்மாதிரிப் பயிற்சிப் பரீட்சை
இலவச கருத்தரங்கு

	பரீட்சை		இலவச கருத்தரங்கு	
திகதி	மு.ப. 8-00	பி. ப. 1 00	பி. ப. 4-00	பி. ப. 5-00
02-12-1991 திங்கள்	தமிழ் மொழியும் இலக்கியமும் I, II&III	ஆங்கிலம் I&II	தமிழ்	ஆங்கிலம்
03-12-1991 செவ்வாய்	கணிதம் I&II	சமயம் I&II (இந்து/றோ.க)	கணிதம்	சமயம்
04-12-1991 புதன்	விஞ்ஞானம் I&II	சமூகக்கல்வி I&II	விஞ்ஞானம்	சமூகக்கல்வி
07-12-1991 சனி	சித்திரம்/ நடனம்/ சங்கீதம் I, II&III; I&II	வர்த்தகமும் கணக்கியலும்/ விவசாயம்/ மனைப்பொருளியல் I & II	வர்த்தகம்/ விவசாயம்	

★ விடைத்தாள்கள் திருத்தப்பட்டு, புள்ளிகளுடன் 08-12-1991 வழங்கப்படும்.
★ அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகளுக்கான சான்றிதழ் வழங்கப்படும்.
★ பரீட்சைக்குத் தோற்ற வசதியில்லாதவர்களும் கருத்தரங்கில் இலவசமாக பங்குபற்றலாம்.

தென்மராட்சியில்: BRILLIANT கல்வி நிறுவனம், சங்கத்தானை, சாவகச்சேரி.
வடமராட்சி: MATHS CENTRE நெல்லியடி, கரவெட்டி
ஆகிய நிறுவனங்களிலும் இப் பரீட்சைகள் நடைபெறும்.

மேலதிக விவரங்களுக்கு:
BOND
புத்தக நிறுவனம்,
58A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1016)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30 11 1991 ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.